# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
# (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | S.C.No.98/2018 |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | அ.சா– 07 ( PW– 07 ) |
| **பெயர்** | :– | பாஸ்கரன் |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரிகள் தோன்றினார்கள். எதிரிகளின் வழக்குரைஞர் தோன்றினார்.

முதல்விசாரணை

நான் தமிழ்நாடு காவல் துறையில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து 31.01.2026-ஆம் தேதியன்று ஓய்வுபெற்று சேலத்தில் வசிக்கிறேன். நான் கடந்த 06.01.2012-ஆம் தேதியன்று சேலம் மாவட்டம் ஓமலூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அந்த காவல் நிலைய குற்ற எண் 94/2006 வழக்கு கோப்பு என் பார்வைக்கு வைக்கப்பட்டது.

மேற்சொன்ன வழக்கு கோப்பை நான் பரிசீலித்தேன். ஓமலூர் வட்டாட்சியர் மாதையன் என்பவர் 12.02.2006-ஆம் தேதியன்று 22.30 மணிக்கு ஓமலூர் காவல் நிலையத்தில் எழுத்து மூலம் கொடுத்த புகாரை அப்போதைய காவல் ஆய்வாளர் தங்கராஜ் பெற்று பரிசீலித்தபின் நிலைய குற்ற எண் 94/2006-ல் வெடிமருந்துகள் சட்டத்தின் 04-ஆம், 05-ஆம் பிரிவுகளின்கீழ் தண்டிக்கதக்க குற்றங்களுக்காக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்திருக்கிறார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ–09** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தொடர்ந்து காவல் ஆய்வாளர் வழக்கை புலனாய்விற்கு எடுத்துக் -கொண்டு நிகழ்நிலை புகார்தாரர் புகாருடன் ஒப்படைத்த, கந்தக வெடிமருந்து 8.375 கி.கி, 16 ஜெலட்டின் குச்சிகள் ஆகியவற்றை சான்றாளர்கள் ராஜரத்தினம், தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினார். அந்த மகசர் **அ.சா.ஆ–10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Tractor மற்றும் Compressor ஒன்றை 91-ஆம் படிவத்தில் கைப்பற்றினார். அந்த படிவம் **அ.சா.ஆ–11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13.02.2006-ஆம் தேதியன்று காலை 09.00 மணிக்கு சான்றாளர்கள் வரதராஜன், அபிமன்னன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசரும் மாதிரி வரைபடமும் தயாரித்தார். அவைகள் முறையே **அ.சா.ஆ–12** ஆகவும் **அ.சா.ஆ–13** ஆகவும் குறியீடு செய்யப் -படுகின்றன. அன்றே சான்றாளர்கள் மாதையன், சந்துரு, மகேஷ்வரி, மனோகரன், தேவராஜன், ராஜரத்தினம் ஆகியோர்களை விசாரித்து பார்வை மகசர் தயார்செய்தார். பார்வை மகசர் சான்றாளர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார்.

வழக்குச் சொத்துக்களை பாதுகாப்பாக வைக்க வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அதன்படி 15.02.2006-ஆம் தேதியன்று நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் ஆணைபடி வெடிமருந்துகளை பாதுகாப்பாக வைப்பதற்கு உரிமம் பெற்றிருந்த அர்ச்சுணன் என்பவரின் கிடங்கில் வைக்கப்பட்டது.

எதிரிகளை அவர் தேடிய நிலையில் 02-ஆம், 03-ஆம் எதிரிகள் முன்பிணை பெற்றதால் அவர்களை கைதுசெய்யவில்லை. 29.02.2006-ஆம் தேதியன்று 01-ஆம் எதிரி பழனிசாமி முன்பிணை பெற்றதால் அவரை கைதுசெய்யவில்லை.

06.01.2012-ஆம் தேதியன்று இந்த வழக்கை நான் புலனாய்விற்கு எடுத்துக்கொண்டேன். 29.03.2012-ஆம் தேதியன்று வெடிமருந்துகளை செயலிழக்க செய்ய நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அனுமதி வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுமதி பெற்று 10.12.2012-ஆம் தேதியன்று வெடிமருந்து நிபுணர் காவல் ஆய்வாளர் வாசுதேவன் மூலம் செயலிழக்க செய்து ஆய்வகத்திற்கு அனுப்பினேன். 12.12.2012-ஆம்

தேதியன்று சென்னை ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். 13.02.2013-ஆம் தேதியன்று வல்லுநர் மஞ்சுளா தேவி அவர்களை விசாரித்து அறிக்கைபெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். 02.05.2013-ஆம் தேதியன்று ஒமலூர் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து சம்பவ இடம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை பெற்றேன். வட்டாட்சியர் அழகிரிசாமியை 03.05.2013-ஆம் தேதியன்று விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

08.06.2013-ஆம் தேதியன்று புலனாய்வில் சேகரிக்கப்பட்ட சான்றுகளை பரிசீலித்து புலனாய்வை முடித்து அரசு குற்றத்துறை வழக்குரைஞரிடம் கருத்துரை பெற்று 08.10.2013-ஆம் தேதியன்று காவல் கண்காணிப்பாளர் மூலம் மாவட்ட ஆட்சியருக்கு மேற்சொன்ன வழக்கை தாக்கல்செய்வதற்கு அனுமதி கோரி அனுப்பினேன். 03.09.2013-ஆம் தேயன்று அனுமதி பெற்று எதிரிகள்மீது 09.09.2013-ஆம் தேதியன்று வெடிமருந்துகள் சட்டபிரவுகள் 04-ஆம், 05-ஆம் பிரவுகளின்கீழ் தண்டிக்கதக்க குற்றங்களை சுமத்தி இறுதி அறிக்கை தாக்கல்செய்தேன்.

கந்தக வெடிமருந்து 8.375 கி.கி, 16 ஜெலட்டின் குச்சிகள் ஆகியவற்றின் நிழற்படம் **அ.சா.பொ–01** ஆகவும் Tractor மற்றும் Compressor **அ.சா.பொ–02** ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.

**குறுக்குவிசாரணை**

எனக்குமுன் இருந்த ஆய்வாளர் தங்கராஜ் வெடிமருந்து கையாலுவதில் நிபனுத்துவம் பெற்றவரா என்றால் என்னால் உறுதியாக சொல்ல முடியாது. நான் வெடிமருந்து கையாளுவதற்கான பயிற்சி பெற்றுள்ளேனா என்றால் பொதுவான பயிற்சிதான் பெற்றுள்ளேன். சிறப்பு

பயிற்சி எதுவும் பெறவில்லை. வெடிமருந்துகளை கண்டுபிக்கவும் செயலிழக்க செய்யவும் காவல் துறையில் தனிபடை உள்ளது என்றால் சரிதான். வெடிமருந்துகளை காவல் நிலையத்தில் நிகழ்நிலை புகார்தாரர் -தான் ஒப்படைத்தார் என்றால் சரிதான். அவருக்கு வெடிமருந்து கையாளுவதற்கு சிறப்பு தகுதி உள்ளதா என்றால் இல்லை. வெடிமருந்து கைப்பற்றபட்டது சம்மந்தமாக வெடிமருந்துகள் ஆணையருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு தகவல் தெரிவிக்கப்-பட்டிருக்கிறது. நான் அந்த காவல் நிலையத்தில் 2013-ஆம் ஆண்டு நவம்பர் மாதம்வரை பணியில் இருந்தேன். புலனாய்வில் சேகரிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்துதான் இறுதி அறிக்கை தாக்கல்செய்தேன் என்றால் சரிதான்.

15.06.2015-ஆம் தேதியன்று எதிரிகளின் வயது, சான்றாளர் பட்டியலில் 12, 13 ஆகிய சான்றாளர்களின் பெயர் விவரங்கள் ஆகியன வேறுபடுகின்றன என்று குறிப்பிட்டும் மகசருடன் 91-ஆம் படிவம் இல்லை என்று குறிப்பிட்டும் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தால் இறுதி அறிக்கை திருப்பப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. 03.03.2016-ஆம் தேதியன்று மீண்டும் சமர்பிக்கப்படுவதாக காவல் உதவி ஆய்வாளர் கையொப்பம் இட்டு பெயர் இல்லாமல் தாக்கல்செய்துள்ளார் என்றால் எனக்குத் தெரியவில்லை. முந்தைய திருப்புதல் சரிசெய்யபடவில்லை என்று மீண்டும் அந்த காவல் அறிக்கை திருப்பப்பட்டது என்றால் எனக்குத் தெரியவில்லை. 04.04.2016, 06.08.2016- ஆகிய நாட்களில் மீண்டும் தாக்கல்செய்யப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியவில்லை. நான் தாக்கல்செய்த இறுதி அறிக்கை முழுமை இல்லாமல் இருந்தது என்றால்

சரியல்ல. 01-ஆம் எதிரி பழனிசாமிதான் உரிமம் இல்லாமல் கல்லை வெட்டி எடுக்கிறார் என்று விசாரணையில் தெரியவந்ததாக புகாரில் சொல்லப் -பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் கல் வெட்ட நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த Compressor பறிமுதல் செய்யப்பட்டது என்று வாசகம் உள்ளது என்று அது இயங்கியதாக வாசகம் இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பொறியை 02-ஆம், 03-ஆம் எதிரிகள் பயன்-படுத்தியதாக புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

10.02.2006-ஆம் தேதியன்று நடந்த சம்பவத்திற்கு 11.02.2006-ஆம் தேதியிட்ட புகார் 12.02.2006-ஆம் தேதியன்று இரவு 10.30 மணிக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். வட்டாட்சியர் அலுவலகமும் காவல் நிலையமும் அருகில்தான் உள்ளது என்றால் சரிதான். புகாரை ராஜரத்தினம் என்பவர்தான் காவல் நிலையத்தில் கொண்டு வந்து கொடுத்தார் என்றால் சரிதான். மகேஷ்வரி வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றபட்டு ஒப்படைக்கப்பட்டது சம்மந்தமாக தனியாக என்னிடம் அறிக்கை எதையேனும் தாக்கல்செய்தாரா என்றால் இல்லை.

சம்பவ நடந்ததாக சொல்லபடும் இடத்திற்கு KMP என்ற கல் உடைக்கும் இடம் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் முறையாக அனுமதி பெற்று கல் உடைக்கும் தொழில் செய்கிறார்களா என்றால் அது எனக்குத் தெரியவில்லை. அந்த இடத்திற்கு அருகில் எண்ணெய் தொழிற்சாலையும் East India Mining தொழிற்சாலையும் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் குப்பங்காடு ஊருக்கு செல்லும் தடம் உள்ளது என்றால் சரிதான். அந்த பாதை குறித்து மாதிரி வரைபடத்தில் இல்லை என்றால் சரிதான். சான்றாளர் பட்டியலில் கண்டுள்ள அனைவரும் அரசு

ஊழியர்கள் என்றால் சரிதான். பொது மக்கள் யாரும் இந்த வழக்கில் சான்றாளராக இல்லை என்றால் சரிதான். அந்த இடத்தில் முனியப்பன் கோவில் உள்ளது என்றால் எனக்குத் தெரியவில்லை. அங்கு நிறைய மரங்கள் உள்ளது என்றும் அவற்றை வரைபடத்தில் சொல்லவில்லை என்றும் சொன்னால் நான் பார்க்கவில்லை. அந்த இடத்தில் அனுமதி பெற்ற கல் உடைக்கும் ஆலை உள்ளது என்றால் எனக்குத் தெரியவில்லை. அந்த இடத்திற்கு இடது பக்கமாக உள்ள சாலை வழியாக அடைக்கனூர், மாட்டுக்காரனூர், நாரணம்பாளையம் ஆகிய ஊருக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். 02-ஆம், 03-ஆம் எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்படும் நாளுக்கும் புகார் கொடுக்கப்பட்ட நாளுக்கும் இடைப்பட்ட நேரத்தில் பொருள் எங்கு இருந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.